www.tamilarangam.net

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ தலைவன் த. விமலேஸ்வரன் புலிகளினால் கோரக் கொலை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ தலைவனும், மாணவர்களினதும், மக்களினதும் ஜனநாயகத்திற்கான போராட்டத்தை முன்னின்று நடாத்தியவனும், உழைக்கும் வர்க்க சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்ட மாக்சியவாதியும், தமிழ் மக்கள் விடுதலைப் போராட்ட போராளியுமான த. விமலேஸ்வரன் (25) (வணிக பீடம்) சென்ற ஆடி 18ம் திகதி நண்பகல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம், யாழ்ப்பாணம், நல்லூர், சட்டநாதர் கோவிலடியில் வைத்து கொலைகார புலிகளினால் கோரமாக சுட்டுக் கொல்லப்பட்டான் என்ற செய்தியை தமிழ் பேசும் மக்களுக்கு மிகவும் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1963 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி என்ற கிராமத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த த. விமலேஸ்வரன் 1982 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக பீடத்துக்கு தெரிவாகினான். தனது இரண்டாவது வருடக் கல்வியை மேற்கொள்ளும் போதே 1984 இல் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தில் (PLOTE) உறுப்பினராகச் சேர்ந்தான். தனது பல்கலைக்கழகக் கல்வியை தற்காலிகமாக நிறுத்தி தமிழீழ மக்கள் விடுதலைக்கழக உறுப்பினர்களுடன் சேர்ந்து கிளிநொச்சியில் மலையகத்திலிருந்து வந்த அகதிகளை குடியேற்றும் பணியில் ஈடுபட்டான். ஒரு குடியேற்றத்திட்டத்தை தானே பொறுப்பெடுத்து சுமார் இரு வருடங்கள் அம்மக்களின் நல்வாழ்விற்காக உழைத்தான்.

பின்னர் 1986 தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் கருத்து முரண்பாடு கொண்டும் அதனுடைய உள் இயக்க அராஜகங்களில் வெறுப்புற்றும், அதனை விட்டு வெளியேறி தன்னால் இடையில் நிறுத்தப்பட்ட பல்கலைக்கழக கல்வியைத் தொடர்ந்தான். கல்வியைத் தொடரும் போதே பல்கலைக்கழக மாணவர்கள் நடாத்திய போராட்டங்களில் பங்கு கொண்டான். பல்கலைக்கழக மாணவர் அவை சிறையில் இருந்த இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி நடாத்திய உண்ணாவிரதப்போராட்டங்களில் தானும் பங்கேற்றான். அதோடு பல்கலைக்கழக கலாச்சாரக் குழு மேடையேற்றிய "மண் சுமந்த மேனியர் - 2" என்கின்ற விடுதலைப் போராட்டம் பற்றிய நாடகத்தில் தானும் முக்கிய பாத்திரமேற்று நடித்தான்.

தொடர்ந்து 1986ஆம் ஆண்டு நடுப்பகுதியில் புதியமாணவர் அமைப்புக்குழு தெரிவு செய்யப்பட்டபோது அதன் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவனாக இவனும் மாணவர்களினால் தெரிவு செய்யப்பட்டான். மாணவர்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தை முன்னின்று நடாத்தினான்.

1986 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 4ம் திகதி பல்கலைக்கழக வணிகபீட மாணவன் அ. விஜிதரன் புலிகளினால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டபோது பல்கலைக்கழக மாணவர்கள் சுமார் ஒரு மாதமாக அகிம்சா ரீதியான போராட்டத்தை நடத்தினர். தனது இறுதி வருடப் பரீட்சையையும் புறக்கணித்து இப்போராட்டத்திற்கு விமலேஸ்வரன் தலைமையேற்றதுமல்லாமல் அப்போராட்டத்தின் உச்சக்கட்டமான சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் தானும் பங்குகொண்டு சுமார் 10 நாள் வரை உண்ணாவிரதம் இருந்தான். பின்னர் புலிகளும், ஏனைய விடுதலை இயக்கங்களும் மக்களுக்கும், மாணவர்களுக்கும் பகிரங்கமாகக் கொடுத்த உறுதிமொழிகளை தொடர்ந்து சாகும்வரை உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

ஆனால் உண்ணாவிரதம் முடிவுற்று ஒரு மாதம் முடிவதற்கிடையில் புலிகள் தங்கள் உறுதிமொழிகளை மீறினர். தங்களுக்கு எதிரான போ

www.tamilarangam.net

ராட்டத்திற்கு தலைமையேற்றவன் என்ற காரணத்துக்காக விமலேஸ்வரன் அவர்களினால் தேடப்பட்டான். அவனைத் தேடி குடாநாடெங்கும் அவர்கள் சல்லடை போட்டார்கள். எனினும் முயற்சிகள் பயனளிக்கவில்லை. அவன் நேசித்த மக்கள் அவனைக் கைவிடவில்லை. குடாநாட்டின் சாதியால் ஒடுக்கப்பட்ட பின்தங்கிய வறிய கூலி விவசாயிகளைக் கொண்ட கிராம மக்கள் அவனுக்கு பாதுகாப்பு அளித்தார்கள். சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேல் தமது செல்லப்பிள்ளையாக கண்ணும் கருத்துமாக அவனை கவனித்தார்கள். அங்கும் அவன் தன்னுடைய நேரங்களை வீணாக்கவில்லை. கிராம மக்களை ஸ்தாபன ரீதியில் ஒன்றிணைப்பதிலும், அவர்களை அறிவியல் ரீதியாக வளர்ப்பதிலும் பெருங்கவனம் செலுத்தினான். ஒரு நூல் நிலையத்தையும், கல்வி நிலையத்தையும் உருவாக்கி கல்வியறிவற்ற சிறுவர்களுக்கு இரவிரவாக கல்வியூட்டினான். பகல் நேரங்களில் கிராம மக்களுடன் கூலி வேலைக்கு சென்று அவர்களின் துயரங்களில் தானும் பங்கேற்றான்.

1987 நடுப்பகுதியில் தொடர்ச்சியாக தங்களுடன் முரண்பட்டுக் கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களுடன் சமாதானம் செய்வதற்காக பல்கலைக்கழக மாணவர்களுடன் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்தினர். மாணவ பிரதிநிதிகள் சமாதானத்திற்கு முன் நிபந்தனையாக மாணவத் தலைவன் விமலேஸ்வரன் கல்வியைத் தொடருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றனர். அதற்கு புலிகளின் பிரதித் தலைவர் மாத்தயா'' அவர் தனது கல்வியைத் தொடரலாம் நாம் எதுவும் செய்ய மாட்டோம்'' என புலிகளின் சார்பில் உறுதி கூறினார். இவ் உறுதிமொழியின் பேரில் விமலேஸ்வரனை கல்வியை தொடருமாறு மாணவர்கள் வற்புறுத்தினர்.

மாணவ தலைவன் விமலேஸ்ரன் தனது கல்வியை தொடர முயற்சித்துக் கொண்டிருந்த வேளை 1987 ஐப்பசியில் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் யுத்தம் ஏற்பட்டது. யுத்தத்தினால் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அனைவரும் அல்லலுற்ற வேளை விமலேஸ்வரன் தனக்குப் பாதுகாப்புக் கொடுத்த கிராம மக்களை காப்பாற்றுவதிலும், பராமரிப்பதிலும் கவனம் செலுத்தினான். அவர்களுக்காகவும், அவர்களைப்போல அகதிகளாக வந்த ஏனைய கிராம மக்களுக்காகவும் வேறு சில இளைஞர்களுடன் சேர்ந்து அகதி முகாம் ஒன்றை அமைத்து சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக அம்முகாமை நிர்வகித்தான்.

யுத்த நிலைமை ஓரளவு தணிந்ததும் 1988 சித்திரையில் நடைபெற்ற பல்கலைக்கழக இறுதிப் பரீட்சைக்கு தோற்றியபின் பரீட்சை முடிவுகளுக்காக காத்துக்கொண்டிருந்தான். புலிகள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொடுத்த உறுதிமொழிகளின் பேரில் தனக்கு எதுவும் நடாக்காது என்ற எதிர்பார்ப்புடன் தனியார் கல்வி நிலையம் சிலவற்றில் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தான்.

ஆனால் கொலைகாரப் புலிகள் தம் உறுதிமொழிகளை மீறி இரண்டு வருடங்களுக்கு முன்பு தமக்கு எதிராக நடைபெற்ற ஜனநாயகப் போராட்டத்திற்கு தலைமையேற்றவன் என்ற காரணத்துக்கு வஞ்சம் தீர்ப்பதற்காக நடுவீதியில் வைத்து கோரத்தனமாக அவனைக் கொலை செய்துள்ளனர்.

அன்பான தமிழ் பேசும் மக்களே!

ஜனநாயகத்திற்காக போரிட்ட, மக்களுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த, உன்னத போராளி விமலேஸ்வரன் கொல்லப்பட்டுவிட்டான். இதுபோன்ற கோரக் கொலைகளை தொடர்ந்தும் அனுமதிக்கப் போகின்றீர்களா? மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுவதை மௌனமாக பார்த்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா?

முடிவு செய்யுங்கள்.

ஜனநாயகத்திற்காக அராஜகத்தை தோற்கடிப்போம்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள்.

---

அ. வி. சே. ச. அச்சகம் கொழும்பு 02. 4750/88

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்